முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அத்திரிமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.02.2019, சனிக்கிழமை

1. **கேளப்பா மைந்தனே சன்மார்க்க நெறி**
   **கேட்டு நீ தொடர்ந்து வந்தாயானால்**
   **நாளதை கோளதை தன்வசமாக்கி**
   **நன்மையே கண்டிட நேருமப்பா**
2. அப்பனே மைந்தனே வாப்பா என்று
   ஆறுமுகன் அவதார அரங்க ஞானி
   காப்பான சன்மார்க்க வழிகாட்டி
   கருணை கொண்டு அழைப்பு தந்துவர
3. வருபவர்கள் வாழ்வு மலருமென்று
   வாழ்த்தியே நித்ய பிரசன்ன ஆசி
   உறுதிபட **விளம்பி கலை திங்கள்**
   **உயர்வான இருபானார் திகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 26ம் நாள் 09.02.2019, சனிக்கிழமை)**
4. வாரமதில் அத்திரி மகரிஷி யானும்
   வழங்குவேன் உலக மக்கள் பயனுற
   தூரமென்று ஞான மார்க்கமதை
   தொலைத்துவிட்டு அஞ்ஞான வழி
5. வழிதனில் தவித்து பல கட்டமும்
   வாழ்வாதார சிக்கல் காண்பவர்கள்
   அழிவில்லா உயர் ஞானநெறி
   அரங்கமகான் அனைவரும் அடைய
6. அடையும் வண்ணம் எளிமையாக்கி
   அறமொடு தயவு எனும் கருவி
   தடைபடா உன்னுள் வளர்த்து
   தானும் நீ உயிர்க்கொலை நீக்கினாலே
7. நீக்கினாலே ஆறுமுகனார் காட்டும்
   நிலைத்த சுப்பிரமணியர் ஞானம் எளிதப்பா
   ஊக்கம்பட உபதேசமாக கூறி
   உண்மைபட எளிய வழிகாட்டி அழைக்க
8. அழைக்கவே உலக மாந்தர்களே
   அலைந்து அலைந்து பிறவழி நோகா
   பிழைபடா அரங்கன் சன்மார்க்க
   பேதமிலா தூய ஞான நெறியை

9. நெறியை ஏற்று வந்துவிட
நீதி வழி நடக்கும் பண்புகளும்
அறியாமை அனைத்தும் விலகி
ஆறுமுகனார் சரவணச்சுடர் வழி

10. வழிதனில் பரிபக்குவ நிலைகூடி
வாழும் காலமே ஆறுமுகனார்
அழியாமை சித்தி கண்டடைந்து
அரங்க ஞானி தருமபலம் வழி

11. வழிதனில் தொடர்பை கூட்டிட
வள்ளலெனும் தருமவான்களாகி
வழிவழியாக வருவோர் வம்சங்களும்
வடிவேலனார் துணைபட ஞானம் பெறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலக மக்களே! கேளுங்கள் என் பிள்ளைகளே! நீங்களெல்லாம் வல்லமைமிக்க சன்மார்க்க நெறியினை ஏற்று தளராது கடைப்பிடித்து தொடர்ந்து சன்மார்க்க நெறியினை பின்பற்றி வந்தீர்களேயானால் நாளையும் கோளையும் உங்களது வசமாக்கி தீமை உடையதாக உள்ள கிரகதோஷம் உங்களை துன்பம் செய்யாது நன்மையையே அடைந்து மகிழ்வுடன் வாழலாம்.

அப்பனே! மைந்தனே! என் பிள்ளைகளே! வாருங்கள்! என்றே தாயன்போடு ஆறுமுகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரும் சன்மார்க்க நெறியினை உபதேசித்து அழைப்பு விடுக்கிறார். உலகோர் சன்மார்க்க நெறியினில் சென்று கடைத்தேறிடவே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அழைப்பை ஏற்று அவரவரும் சன்மார்க்க நெறியினை ஏற்று கடைப்பிடித்து வர, அவரவரின் வாழ்வு மலர்ந்து மகிழ்வுடைய வாழ்வாய் அமைந்திடும் எனக் கூறியே உலக மக்கள் பயன்பெறும் வகையிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே அத்திரிமகரிஷி யானும் **விளம்பி வருடம் தை மாதம் 26ம் நாள் 09.02.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே உரைக்கின்றேன் என்கிறார் மகான் அத்திரிமகரிஷி.

உண்மையான ஞான மார்க்கம் கடினமானது என்றும், நெடுநாள் பாடுபட்டு மெல்லமெல்ல சென்று ஞானத்தை அடைய வேண்டும் என்றும், உண்மை ஞானம் அடைய வெகுதூரம் வெகுகாலம் ஆகும் என்றும் எண்ணி உண்மை ஞானம் அடைகின்ற முயற்சியை தொலைத்துவிட்டு எளிமையாக ஞானம் கற்று தருகிறேன், விரைந்து ஞானம் பெறலாம் என பொய் கூறி அழைக்கும் போலி ஆன்மீக கபட வேடதாரிகளின் வசீகர பேச்சினால் ஈர்க்கப்பட்டும், தனது அறிவை பெரியதாய் எண்ணி ஞானநூல்களை படித்து குருவருள் பெறாமல் அஞ்ஞான வழிகளிலே சென்று பலவிதமான கஷ்டங்களையும், நோய்களையும், துன்பங்களையும், பாவங்களையும், சாபங்களையும் பெற்று வாழ்வாதாரத்திலும் சிக்கலைக் கண்டவர்களும், அஞ்ஞான வழி சென்று கைப்பொருளை இழந்தவர்களும் பட்ட துன்பங்களிலிருந்தும் மீட்டிட தாயினும்மிக்க கருணையோடு முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார், அழிவிலா உயர்ஞான நெறியான, மெய்ஞான நெறியான, மரணமிலாப் பெருவாழ்வை அடையும் உண்மை ஞானநெறியினை உலகோர் அனைவரும் அடையும் பொருட்டு அதன் சூட்சா சூட்சுமங்களை கூறியும், எளிமையாக்கியும் தந்து தயவே ஞானவீட்டின் திறவுகோல் எனும் பேருண்மையையும்

மக்களுக்கு எடுத்துச் சொல்லி அறத்துடன் தயவு எனும் உணர்வினை உம்முள் வளர்த்து தடைபடாது தயவை பெருக்கி தருமம் பெருக்கி வாழ்வதுடன் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரக்கம் காட்டி எவ்வுயிரையும் கொல்லாதிருந்து உயிர்க்கொலை நீக்கி, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு வாழ்ந்து வந்தாலே உமக்கு முருகப்பெருமான் காட்டும் சுப்பிரமணியர் ஞானம் எளிதாக கைகூடும் என்றே மக்களுக்கு உபதேசித்து ஊக்கமும் ஆக்கமும் தந்து உண்மை ஆன்மீக பாதையை எளிமையாக்கி எளிய வழிகாட்டி அழைக்கின்றார் அரங்கமகானும்.

உத்தம மகா ஞானி அரங்கமகானும் உங்களை அழைத்திட, உலக மக்களே அரங்கன் அழைப்பை அலட்சியம் செய்யாமல் ஏற்றுக் கொள்ளுங்கள். அலைந்து அலைந்து பிறவழி சென்று மனம் வெதும்பி உடல் நலிந்து நோகாமல் வாழ்வினில் பிழைகளைச் செய்து பாவியாகாமல் அரங்கன் கூறும் சன்மார்க்க நெறியினை சாதி, மத, இன, மொழி, தேச பாகுபாடுகள், வேற்றுமைகள் இல்லாத பேதமற்ற தூய ஞான நெறியினை மனம் விரும்பி சந்தேகம் இன்றி ஏற்றுக் கொண்டு கடைப்பிடியுங்கள்.

அரங்கனின் தூய சன்மார்க்க நெறிக்குள் வந்து விட்டால், நீதிவழி நடப்பீர்கள், நெறிப்படி வாழ்வீர்கள், உயர்ந்த பண்புகள் உண்டாகும், உங்களை ஜென்மஜென்மமாக பற்றித் தொடரும் அறியாமை விலகிடும். முருகப்பெருமானின் சரவணஜோதி சுடர் மூலமாக உங்களுக்கு முருகப்பெருமானின் அருள் கிடைக்கப்பெற்று வாழ்வினில் பரிபக்குவ நிலைகள் பெருகி வாழும் காலத்திலேயே இந்த ஜென்மத்திலேயே அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு வெற்றி கண்டு சித்தியடைந்து ஆறுமுக அரங்கமகானின் தருமத்தின் பலத்தின் துணையால் வெற்றி கண்டு அரங்கமகா தேசிகனாரின் தருமத்தை தொடர்ந்து தமது தர்மங்களாக செய்து செய்து தொடர்ந்து தர்மம் செய்து வள்ளல்களாகி தருமவான்களாகி அவர்கள் வழிவழியாக வருகின்ற வம்சங்களும் முருகப்பெருமானின் துணையால் ஞானம் பெறுவார்கள் என அரங்கமகா தேசிகனாரின் அருட்பெரும் அற்புதங்களை உரைக்கின்றார் மகான் அத்திரிமகரிஷி.

–சுபம்–